# தொழுகை மற்றும் உளூ

## உளூ

தொழுகைக்கு முன் செய்யப்படும் தூய்மைக்கு உளூ எனப்படும். உளூ என்பது தொழுகைக்கு முன்னால் குறிப்பிட்ட சில உறுப்புகளை கழுவித் தூய்மைப் படுத்துவது ஆகும். உளூவைப்பற்றி திருமறை திருக்குர்ஆன் கூறுவதைப் பார்ப்போம்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُواْ إِذَا قُمْتُمْ إِلَى الصَّلاةِ فاغْسِلُواْ وُجُوهَكُمْ وَأَيْدِيَكُمْ إِلَى الْمَرَافِقِ وَامْسَحُواْ بِرُؤُوسِكُمْ وَأَرْجُلَكُمْ إِلَى الْكَعْبَينِ

நம்பிக்கைகொண்டோரே! நீங்கள் தொழுகைக்காகத் தயாராகும்போது (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் (இரு) கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி(மஸஹு செய்து) கொள்ளுங்கள். உங்கள் கால்களை இரு கணுக்கால் வரைக் (கழுவிக் கொள்ளுங்கள்)

**(அல்-குர்ஆன் 5:6)**

அருள்மறை அல்-குர்ஆனுக்கு விளக்கமாக வாழ்ந்த அண்ணல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இது குறித்து விரிவாகக் கூறிய செய்திகளின் சுருக்கத்தை கீழே காண்போம்.

**உளூ செய்யும் முறை :-**

1. உளூ செய்வதாக (நிய்யத்) மனதில் எண்ணிக் கொண்டு பிஸ்மில்லாஹ் எனக் கூறவேண்டும்.
2. இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.
3. மூன்று முறை வாய் கொப்பளித்து மூக்கையும் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
4. முகத்தை மூன்று முறை கழுவ வேண்டும். (அளவு: ஒரு காதிலிருந்து மறு காது வரையும் நெற்றியின் துவக்கம் முதல் கீழ் தாடை வரையும்)
5. இரு கைகளையும் விரல் நுனி முதல் முழங்கை உட்பட மூன்று முறை கழுவ வேண்டும். முதலில் வலது கையையும் பின்னர் இடது கையையும் கழுவ வேண்டும்.
6. தலை முழுவதையும் இரு கைகளால் (மஸஹ்) தடவ வேண்டும். (இரு கைகளையும் தலையின் முற்பகுதியிலிருந்து பிற்பகுதிவரை கொண்டு சென்று மீண்டும் அதே கையை ஈரத்துடன் முற்பகுதி வரை கொண்டு செல்ல வேண்டும். அல்லது தலையின் சிறு பகுதியை மஸ்ஹு செய்தல். பிறகு ஆட்காட்டி விரலை காதின் உட்பகுதியையும் பெரு விரலால் காதின் வெளிப்பகுதியையும் ஒரு தடவை தடவ வேண்டும்.
7. இரு கால்களையும் விரல் நுனியிலிருந்து கணுக்கால் வரையிலும் மூன்று முறை கழுவ வேண்டும். ( முதலில் வலது காலையும் பின்னர் இடது காலையும் கழுவ வேணடும்)
8. இவையனைத்தையும் வரிசைப்படி செய்ய வேண்டும்.
9. மேற்கூறியபடி யார் உளூவை அழகிய முறையில் செய்து விட்டு அதன் பிறகு.

“அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு”

பொருள் : வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவருமில்லை. அவன் தனித்தவன்.இணையில்லாதவன்.மேலும் அண்ணல் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனது (திருத்) தூதருமாவார்கள் என சாட்சி கூறுகிறேன். என்று கூறினால் அவருக்காக எட்டு சுவன வாசல்களும் திறக்கப்படும் என அண்ணல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : உமர் (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: திர்மிதி)**

குறிப்பு: வரிசை எண் 6,7 க்கு ஆதாரம்:

**தலைக்கு மஸஹ் செய்வது எப்படி?**

1. ஈரக்கையால் தலையையும் காதுகளையும் தடவுவதற்கே மஸஹ் எனப்படும்.
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது இரு கைகளையும் தலையின் முன்பாகத்தில் வைத்து பிடரி வரை தடவி மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே கைகளைக் கொண்டு வந்தார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு ஸைத் (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம், திர்மிதீ, நஸயீ, அபூதாவுது, இப்னுமாஜா, அஹ்மது)**

2. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உளு செய்யும் போது தலைக்கும் காதுக்கும் தனது ஆட்காட்டி விரல்களை காதுகளின் உட்பகுதியிலும் கட்டை விரல்களை காதுகளின் வெளிப்புறத்திலும் வைத்து மஸஹ் செய்தார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: அபூதாவூது, நஸயீ, இப்னு குஸைமா)**

3. ஒரு மனிதரின் காலில் நகம் அளவுக்கு தண்ணீர் படாததைக்கண்ட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திரும்பிச்சென்று உங்கள் உளுவை அழகாகச்செய்து வாருங்கள் என்றார்கள்.
அறிவிப்பவர்: அனஸ் (ரலியல்லாஹுஅன்ஹு)

**(ஆதாரம்: நஸயீ, அபூதாவூது)**

**உலு உருப்பின் துஆ**

**இரண்டு முண்கையையும் கழுவும்போது**

**اللهم احفظ يدي عن معاصيك** "அல்லாஹும்மஃஹ்பள் யதய்ய அன் மஆஸிக"

**வாய் கொப்பளிக்கும் போது**

**اللهم اعني على ذكرك وشكرك** "அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக"

**நாசிக்குத் தண்ணீர் செலுத்தும்போது**

**اللهم ارحنى رائحة الجنة** "அல்லாஹும்ம அரிஹ்னீ ராஇஹதல் ஜன்னத்தி"

**முகத்தை கழுவும் போது**

**اللهم بيض وجهى يوم تبيض وجوه وتسود وجوه** "அல்லாஹும்ம பய்யிழ் வஜ்ஹி யவ்ம தப்யழ்ழு உஜுஹுன் "

**வலது கையைக் கழுவும் போது**

**اللهم اعطنى كتابى بيميني وحاسبني حسابا يسيرا** "அல்லாஹும்ம அஃதினீ கிதாபீ பியமீனீ வஹாஸிப்னீ ஹிஸாபன் யஸீரா"

**இடது கையை கழுவும் போது**

**اللهم لاتعطني كتابي بشمالى ولامن وراء لهرى** "அல்லாஹும்ம லா துஃதினீ கிதாபீ பிஷிமாலீ வலா மின் வராஇ ளஹ்ரீ "

**தலைக்கு மஸ்ஹு செய்யும் போது**

**اللهم حرم شعرى وبشرى على النار** "அல்லாஹும்ம ஹர்ரிம் ஷஅரீ வபஷரீ அலன்னாரி "

**இரண்டு காதுகளுக்கும் மஸ்ஹு செய்யும் போது**

اللهم اجعلني من الذين يستمعون القول فيتبعون احسنه "அல்லாஹூம்மஜ் அலஇனீ மினல்லதீன யஸ்தமீஊன அஹ்ஸனஹூ"

**இரண்டு கால்களையும் கழுவும் போது**

اللهم ثبت قدمي عل الصراط يوم تنزل الاقدام "அல்லாஹூம்ம ஃதப்பித் கதமீ அலஸ்ஸிராதி யவ்ம தஸில்லுல் அக்தாமு"

### காலுறை அணிந்தவர் உளு செய்வது எப்படி?

5. ஒருவர் உளு செய்து விட்டு காலுறை (ஸாக்ஸ்) அணிந்து, பிறகு உளு முறிந்துவிட்டால் திரும்ப உளு செய்யும் போது அவர் காலுறையை கழற்ற வேண்டிய அவசியமில்லை. காலை கழுவ வேண்டிய நேரத்தில் காலுறையின் மேல்பகுதியில் மட்டும் மஸஹ் செய்தால் போதும். கடமையான குளிப்பிற்கு கட்டாயம் கழற்றவேண்டும்.

### ஒட்டக இறைச்சியைச் சாப்பிட்டால் உளு முறியுமா?

நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ஒட்டக இறைச்சியைச் சாப்பிட்டால் உளு செய்ய வேண்டுமா? எனக் கேட்ட போது ஆம் என்றார்கள்.
அறிவிப்பவர்: ஜாபிர் (ரலியல்லாஹூ அன்ஹூ)
**(ஆதாரம்: முஸ்லிம்)**

### பெண்களைத் தொட்டால் உளு முறியுமா?

ஷாபி மத்ஹபின் பிரகாரம் உளு முறியும்.

ஹனபி மத்ஹபின் பிரகாரம் உளு முறியாது.
ஓர் இரவில் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களைப் படுக்கையில் காணாததால் அவர்களை என் இரு கைகளால் தேட ஆரம்பித்தேன். அப்போது அவர்களின் இரு பாதங்களும் நட்டப்பட்ட நிலையில் ஸஜ்தாவில் இருக்க எனது இரு கைகளும் அவர்களின் இருபாதங்களிலும் பட்டுவிட்டன.

(அறிவிப்பவர்: ஆயிஷா (ரலியல்லாஹூ அன்ஹா)

**(ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி, இப்னுமாஜா- 3841, 1179, 968)**

### மர்ம பாகத்தை தொட்டால் உளு முறியுமா?

**மர்ம பாகத்தை திறையுடன் தொட்டால் உளுமுரியாது என்பதன் ஆதாரம்**

1. ஒரு கிராமவாசி நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களிடம் தொழுகையில் ஒரு ஆடவர் தன் ஆண்குறியைத் தொட்டு விடுகிறார். அவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எனக் கேட்டபோது அதுவும் உனது உடலிலுள்ள ஒரு சதைத்துண்டே தவிர வேறில்லை அல்லது உன்னிலுள்ள சதைத்துண்டுதானே! எனக் கூறினர்.
அறிவிப்பவர்: தல்கு பின் அலி (ரலியல்லாஹூ அன்ஹூ)

**(ஆதாரம்: இப்னுமாஜா (483), அல்-மிஷ்காத்-320)**

**மர்ம பாகத்தை திறையின்ரி தொட்டால் உளுமுரியும் என்பதன் ஆதாரம்**

2. உங்களில் ஒருவர் தனது மர்ம பாகத்தைத் தொட்டுவிட்டால் அவசியம் அவர் உளு செய்து கொள்ளவும். அறிவிப்பவர்: பஷ்ரா பின்த் ஸஃப்வான் (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: அபூதாவூது, மிஷ்காத் திர்மிதி, இப்னு ஹிப்பான்)**

**மையித்தை சுமந்தால் உழு முறியுமா?**

யார் மையித்தை கழுகினாரோ அவர் குளித்துக்கொள்ளட்டும் யார் சுமந்தாரோ அவர் உலுச்செய்து கொள்ளட்டும்.

அறிவிப்பவர் அபூஹுறைரா (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: அஹ்மத், நஸயீ, திர்மதீ)**

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**